# பண்மகள்

PANMAGAL பண்மகள்

இதழ் : 03 மே – ஓகஸ்ட் 2008 அன்பளிப்பு : 10ரூபா


*கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம்*

## எமது பாடசாலை அணிகள் சாதனை!



எமது பாடசாலையின் 19 வயதுப்பிரிவு கரப்பந்தாட்ட அணி மாவட்ட சம்பியனாகச் சாதனை படைத் துள்ளது. திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற விறுவிறுப்பான இறுதிப் போட்டியில் யூனியன் கல்லூரி அணியை எமது பாடசாலை அணி வென்று இச்சாதனையை நிலை நாட்டியுள்ளது. இவ்வணியினர் வலய மட்டத்திலும், கோட்ட மட்டத்திலும் முதலிடம் பெற்றமை குறிப்பிடத் தக்கது. வலய இறுதிப் போட்டியில் யூனியன் கல்லூரியையும், கோட்ட இறுதிப் போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரியையும் இவர்கள் வெற்றி கொண்டனர். இவ்வணியினர் மாகாணமட்டப் போட்டிகளுக்கு வவுனியாவுக்குச் செல்லவுள்ளனர்.

17 வயதுப் பிரிவு வலைப்பந்தாட்ட அணியினர் மாவட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றனர். கோட்ட மட்டத்தில் பண்டத்தரிப்பு யசிந்தா றோ.க.த.க பாடசாலையை வெற்றி கொண்டு முதலாமிடத்தைப் பெற்ற இவ்வணி வலயமட்ட இறுதிப் போட்டியில் சுன்னாகம் இராமநாதன் கல்லூரி அணியுடன் மோதித் தோல்வியடைந்து இரண்டாம் இடத்தைப் பெற்றது. மாவட்ட மட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரியை வெற்றி கொண்டு மூன்றாமிடத்தைப் பெற்றுக்கொண்டது.

வலைப்பந்தாட்டத்தில் எமது 15 வயது மற்றும் 19 வயதுப் பிரிவு அணிகள் கோட்ட மட்டத்தில் முறையே மூன்றாம், இரண்டாம் இடங்களைப் பெற்றுக் கொண்டன. அதுபோல கரப்பந்தாட்டத்தில் 15 மற்றும் 17 வயதுப்பிரிவு அணிகள் கோட்ட மட்டத்தில் இரண்டாமிடத்தைப் பெற்றுக்கொண்டன.

விளையாட்டுத்துறையில் எமது பாடசாலை அணிகளின் சாதனைகளில் நாம் பெருமை கொள்கிறோம். கரப்பந்தாட்ட அணிகளின் முகாமையாளர் திரு. டொ. யூட்நிர்மலன், வலைப்பந்தாட்ட அணிகளின் முகாமையாளர் திரு. வே. சிவசக்திவேல், ஒவ்வொரு பிரிவு அணிகளின் பொறுப்பாசிரியர்கள், பயிற்றுவிப்பாளர் திரு. டனிஸ் ஆகியோரின் அர்ப்பணிப்பான சேவையே இவ்வெற்றிக்கு அடிப்படையாகும். அவ்வணிகளை வழிநடத்தியும், நெறிப்படுத்தியும், பயிற்றுவித்தும் இச்சாதனைகளுக்கு நிலைக்களனாக இருந்த இவர்களைப் பாராட்டுகின்றோம். எல்லாவற்றிற்கும் மேலாக மன உறுதியுடன் விளையாடிய வீராங்கனைகளையும் பாராட்டுகின்றோம்.

# பண்மகள்

காலாண்டிதழ்

ஆலோசனை
திருமதி கி. சிவராஜா
(அதிபர்)

பிரதம ஆசிரியர்
திரு. சு. ஸ்ரீகுமரன்

இணையாசிரியர்
திருமதி F.R.J. ஜெயந்தன்

ஆசிரியர் குழு
திருமதி தி. கருணீசன்
செல்வி கௌ. இராசதுரை
திரு. பொ. அமிர்தலிங்கம்

கணனி வடிவமைப்பு
திரு ச. விக்கினேஸ்வரன்

அச்சுப் பதிப்பு
J.S. பிறிண்டேர்ஸ்
பண்டத்தரிப்பு

வெளியீடு
பண்டத்தரிப்பு
பெண்கள் உயர்தர
பாடசாலை


# தலையங்கம்

எமது பாடசாலையில் கரப்பந்தாட்ட அணி உருவாக்கப்பட்டு குறுகிய காலத்துக்குள்ளே மாவட்ட சம்பியனாகப் பரிணமித்துள்ளது. 185 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள இவ்வேளையில் இது பாடசாலையைப் பெருமைப்படுத்தும் விடயமாகும். கல்வியிலும், இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் முன்னணிப் பாத்திரம் வகிக்க அவாவும் எமது செயல்நோக்கை வலுப்படுத்த ஒவ்வொருவரும் பாடுபட வேண்டியுள்ளது.


அவ்வகையில் கடந்த ஆண்டு க.பொ.த உயர்தரப் பெறுபேறுகள் மகிழ்ச்சிதரும் சமிக்ஞையாக அமைந்திருந்தன. ஆயினும் க.பொ.த சாதாரணதரப் பெறுபேறுகள் எமது எதிர்பார்ப்பை மெய்ப்பிக்கத் தவறிவிட்டன.

ஒவ்வொரு மாணவரும் இறுதி இலக்காக தம்முன் வைக்கப்பட்டுள்ள பரீட்சையை முதன்மைப்படுத்த வேண்டும். அதேவேளை தமது உள்ளார்ந்த ஆற்றல்களை - திறமைகளை - வலுவோடு பிரயோகித்து, தம்மை அவயத்து முந்தியிருக்கும் ஒருவராக மாற்ற வேண்டும். எம்மிரு கண் போன்ற இவ்விரு செயல்களையும் ஏக காலத்தில் முன்னெடுத்து வெற்றி பெறும் போது அப்பெருமை எமது கல்லூரி அன்னையை அணிசெய்யும் மணி மகுடமாகின்றது.

எனவே, மஹாகவியின் "மீண்டும் தொடங்கும் மிடுக்கு" என்ற வீரியம் மிக்க வார்த்தையினைச் சிரமேற் கொண்டு முயல்வோம் ; முன்னேறுவோம் ; வெற்றி பெறுவோம்.

-பிரதம ஆசிரியர்-

# உயிர்ப் பல்லினத்தன்மை அருகிவரல்



உயிர்ப் பல்லினத்தன்மை எனும் போது உலகில் வாழும் பல்வேறுபட்ட உயிரினங்களின் அனைத்துக் கூட்டு அமைப்பினையும், அவற்றில் ஒவ்வொரு உயிரினங்களும் ஒன்றோடு ஒன்று இணைந்து எவ்விதம் தமது நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன என்பதையுமே குறிக்கின்றது. உயிர்ப் பல்லினத் தன்மையானது உயிரினத் தோற்றப்பாட்டிற்கும் உயிர் வாழ்க்கைக்கும் இடையிலான அடிப்படை அம்சத்தினையும் கொண்டுள்ளது. இவ் உயிர்ப் பல்லினத்தன்மை யானது இயற்கைச் சூழலை உருவாக்குவதிலும், இயக்குவதிலும் முக்கிய பங்களிப்பினையும் செய்து வருகின்றது.



பொதுவாக உயிர்ப் பல்லினத் தன்மை யானது வெவ்வேறு பிரதேச இயற்கைச் சூழலுக்கேற்ப, அதாவது ஒவ்வொரு பிரதேச காலநிலை, தரைத்தோற்ற அம்சங்களுக்கேற்ப வேறுபட்டே காணப்படும். பிரதேசரீதியாக வேறுபட்டுக் காணப்படும் உயிர்ப் பல்லினத் தன்மையின் உருவாக்கமும், பரவலாக்கமும் கூட பிரதேச ரீதியில் இயற்கைச் சூழலின் தன்மைகளுக் கேற்ப வேறுபட்டே காணப்படும். இந்தவகையில் அயனப்பிரதேசத்தின் பௌதீக அமைப்பும், சிறந்த காலநிலைத் தன்மையும் காரணமாக ஏனைய பிரதேசங்களைவிட அயனப் பிரதேசத்தில் மிக உயர்ந்த உயிர்ப் பல்லினத்தன்மை காணப்படுவது குறிப்பிடத் தக்கது.




உயிர்ப் பல்லினத்தன்மையானது புவிச்சூழலையும் உயிர்வாழ் இனங்களையும் இணைக்கும் ஒரு பாலமாகவே செயற்படுகின்றது. உயிர்ப் பல்லினத் தன்மையில் உள்ள நுண்ணுயிர்கள், ஒட்டுண்ணிகள் என்பனவே இறந்து கிடக்கும் பெரிய மிருகங் களையும், தாவரங்களையும், அழுகக்கூடிய பொருள் களையும் தமது செயற்பாட்டின் மூலம் பிரிகை யடையச் செய்து மண்ணோடு மண்ணாக்குகின்றது. இல்லாவிட்டால் இப்பூமி துர்நாற்றம் வீசும் ஒரு இடமாகவே காணப்படும். மேலும் இந்த உயிர்ப் பல்லினத் தன்மையானது சூழல் சமநிலை, காலநிலைச் சமநிலைத் தன்மைகளைப் பேணு



வதிலும் முக்கிய பங்காற்றுகின்றது. உலகரீதியில் ஓர் ஒழுங்குமுறையில் போசனைத் தொடரைப் பேணுவதிலும், மண் வளத்தைப் பேணுவதிலும் உயிர்ப் பல்லினத்தன்மை முக்கிய இடம் வகிக்கின்றது. இதேபோன்று சில நுண்ணுயிர்கள் கடற்கரையில் முருகைக்கல் உற்பத்திக்குக் காரணமாகின்றது.

உயிர்ப் பல்லினத்தன்மையின் முக்கியத்துவம் அறியாத நிலையில் தற்காலத்தில் மானிட நடவடிக்கைகள் இதன் அழிவுக்குப் பங்களிப்புச் செய்கின்றன. இதனால் பல்வேறு வகையான உயிரின வகைகள் புவியில் வாழ்ந்து பின் அழிந்தும் விட்டன. இதே மனித நடவடிக்கையால் பெறுமதிவாய்ந்த தாவர இனங்கள் மிக விரைவாக அழிக்கப்படுகின்றன. கடல்வாழ் அரிய உயிரினங்கள் கப்பல்களிலிருந்து கசியும் இரசாயன பதார்த்தங்களின் தாக்கம் காரணமாக அழிந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.



உயிர்ப் பல்லினத்தன்மையின் அழிவானது பல்வேறுபட்ட சூழல் பிரச்சினைகளுக்கும் காரணமாகின்றது. இயற்கைச்சமநிலை பாதிப்படைதல், காலநிலைச் சமநிலை சீர்குலைதல், பொருளாதார அடிப்படையில் பெறுமதிமிக்க தாவர இனங்கள் அழிந்துபோதல், காட்டு விலங்கினங்கள் அழிவதுடன் சில தனிமைப்படுதல், மருந்து மூலிகைகள் இல்லாது போதல் போன்றவற்றுடன் நீரியல் வட்டத்திலும் பாதிப்பு ஏற்படுகின்றது. இந்நிலைமை நீரேந்து பிரதேசங்களிலும், நதிப்படுக்கைகளிலும் வண்டல் படிவுகள் அதிகரிக்கக் காரணமாகின்றன. இதனால் நீர்த்தேக்கங்கள், நீர்ப்பாசனக் கால்வாய்கள் பாதிப்படைந்து நீர்மின்சார உற்பத்தி பாதிப் படைவதுடன் விவசாய நடவடிக்கைகளும் பாதிப்படைய வாய்ப்பேற்படுகின்றது.



உயிர்ப் பல்லினத்தன்மை அழிவிற்கும், அதனால் ஏற்படும் பாதக விளைவிற்கும் அடிப்படைக்காரணம் குடித்தொகைப்

பெருக்கமாகும். மிகையான குடித்தொகைக்கேற்ப பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதால் திட்டமிடப்படாத வகையில் காடுகள் அழிக்கப்படுகின்றன. உயிர்ப் பல்லினத்தன்மையின் பிரதான உறைவிடமான காடுகள் அழிக்கப்படுவதனால் உயிர்ப் பல்லினத் தன்மை அருகிவருகின்றது. அமிலமழை பொழிவதனால் பரந்த பிரதேச உயிர்ப் பல்லினத்தன்மை பாதிப்படைகின்றது.

உயிர்ப் பல்லினத்தன்மையின் உண்மைநிலை புரியாத மக்களே அதன் அழிவிற்குக் காரணமாகின்றனர். எனவே உயிர்ப் பல்லினத்தன்மையின் முக்கியத்துவத்தை மக்களுக்கு உணர்த்துவது அவசியமாகின்றது. ஒரு பிரதேசத்தின் உயிரியல் வளங்களின் முக்கியத்துவம், அதன் பெறுமதி, வரலாற்றுப் பின்னணி என்பன் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்துவதன் மூலம் உயிர்ப் பல்லினத்தன்மையினைப் பாதுகாக்க முடியும்.

*திருமதி. தி. கருணீசன்*

□□



பாடசாலையின் ஆரம்பப் பிரிவு இல்ல மெய்வல்லுநர் போட்டி 01-02-2008 வெள்ளிக்கிழமை காலை பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. அதிபர் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் பிரதம விருந்தினராக பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ. கூ. சங்க பொதுமுகாமையாளர் திரு. ஆ. நாகராஜா அவர்களும், சிறப்பு விருந்தினராக பண்டத்தரிப்பு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் திரு. ந. நிர்மலானந்தன் அவர்களும் கலந்து கொண்டனர்.



# சேர் ஐசாக் நியூட்டன்

சேர் ஐசாக் நியூட்டன் 1642ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25ஆம் திகதி பிறந்தார். இவர் பிறந்த இடம் இங்கிலாந்தில் உள்ள "வூல்ஸ் தோப்" என்பதாகும். கலிலியோ இறந்த ஆண்டு இவர் பிறந்தது மட்டுமல்லாது புவியீர்ப்புப் பற்றி கலிலியோ ஆரம்பித்து வைத்த வேலையை நியூட்டன் முடித்து வைத்து புவியீர்ப்பு விதியை உலகிற்கு அறிமுகப்படுத்தினார்.

நியூட்டன் ஒளிபற்றிச் செய்த பரிசோதனை நிறங்கள் பற்றிய புதிய உண்மைகளுக்கு அவரை இட்டுச் சென்றது. அவர் வெள்ளை ஒளியை அரியத்தினூடாகச் செலுத்திய போது அது 7 நிறங்களாகப் பிரிந்தது. இதனையே நாம் நிறமாலை என்கிறோம். வெள்ளை ஒளியில் இருந்து பிரிந்து வந்த ஏழு நிறங்களையும் நியூட்டன் திரும்பவும் ஒரு அரியத்தினூடு செலுத்தி வெள்ளை ஒளியை மீண்டும் பெற்றார்.

நியூட்டன் இளவயதில் ஒருமுறை தனது தோட்டத்தில் அப்பிள் மரத்தின் கீழ் அமர்ந் திருந்து படித்துக் கொண்டிருந்தார். அப்போது இவரின் தலையில் அப்பிள் பழமொன்று வீழ்ந்தது. அதுவே புவியீர்ப்பு விதியை அவர் உருவாக்கக் காரணமாகியது.

சந்திரனிலும், ஏனைய கிரகங்களிலும் விண்கலங்களை அனுப்பிப் பரிசோதனை செய்யும் நிலையை நியூட்டனின் புவியீர்ப்பு விதியே ஏற்படுத்தியது. நியூட்டனின் இயக்க விதிகளும் முக்கிய மானவை. பௌதீகவியல் துறையில் நியூட்டனின் விதிகளே அதிக முள்ளன. அவர் கலிலியோவால் வடிவமைக்கப்பட்ட தொலை நோக்கியை நவீனப்படுத்தி புதிய வகைத் தொலைநோக்கியை உருவாக்கினார்.

42 வயதில் தான் அரிய விஞ்ஞான கண்டுபிடிப்புக்களைச் செய்தார். இவர் 1669இல் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் கணிதப் பேராசிரியராக நியமிக்கப் பட்டார். நியூட்டன் விஞ்ஞானத்தில் அரிய சாதனைகளைச் செய்தபோதும் மிகவும் புதிரான மனிதர். திருமணம் செய்யவில்லை. சிலரோடு மட்டும் நட்புக் கொண்டிருந்தார். இவர் மற்ற விஞ்ஞானிகளோடு சண்டை சச்சரவுக்குப் போவதில்லை. மனதை ஒருமுகப்படுத்தி வேலை செய்யும் சக்தி உடையவர். அதுவே அவரது வெற்றிக்கு காரணமாக இருந்தது. நியூட்டன் 84 வயது வரை வாழ்ந்தார். 1726இல் நியூட்டனின் உயிர் உலகைவிட்டுப் பிரிந்தது.

யோ. கஜனா
9B

# இலஞ்சத்தையும் ஊழலையும் ஒழிப்பதற்கு எங்களால் செய்யக்கூடியவை

இன்றைய காலகட்டத்தில் இலஞ்சமும் ஊழலும் எங்கும் வெட்ட வெளியாக காணப்படுகின்றது. இவ்விலஞ்சமும் ஊழலும் எத்தனை வறியவர்களின் கனவுகளையும் நனவுகளையும் வீணடித்து பொசிக்கி அழிக்கின்றன. இலஞ்சம் என்பது பணவசதி படைத்தோர் ஒரு செயலைச் செய்வதற்காக தவறான வழியில் பணத்தை உரிய அதிகாரிகளுக்கு அளித்து அச்செயலை நிறைவேற்றுவதாகும். ஒரு வறியவன் நீதிமுறைப்படி தனது காரியங்களைச் செய்ய முயன்றால் அது நிறைவேறாது. இதனால் அவனது தேவைகள் பூர்த்தி ஆகாமல் இருக்கின்றன. திறமைகள் இருந்தும் இலஞ்சம் காரணமாக முன்னேற முடியாமல் போகின்றது.

மக்களை ஏமாற்றி கொள்ளை இலாபம் ஈட்டலும், பதுக்கலும், துஷ்பிரயோகம் செய்தலும் ஊழல் ஆகும். ஒரு பொருளின் உண்மை யான விலையிலும் பார்க்க அதிகபட்சமான விலைக்கு விற்கிறார்கள். இதனால் மக்கள் ஏமாறுகின்றார்கள். இதெல்லாம் ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று தட்டிக் கேட்காமல் தாங்களும் தங்களுடைய சமூகமும் என்று தங்கள் பாட்டில் நடக்கிறார்கள். தங்கள் சுயநலத்தை பாதுகாத்து தாங்கள் தங்கள் பாட்டில் வாழுவோம் என்ற உணர்வோடு வாழ்கின்றார்கள்.

எதிர்கால சந்ததியினருக்கு இலஞ்சம் என்றால் என்ன என்று தெரியாத அளவிற்கு இலஞ்சத்தையும் ஊழலையும் முற்றாக நாட்டில் இருந்து ஒழிக்க வேண்டும். இதற்காக அனைத்து இளைஞர், யுவதிகளும் அரும்பாடுபட வேண்டும். கறுப்பு பணம் என்ற வாசனை கூட எதிர்காலத்தில் வீசாத அளவிற்கு இன்றைய இளைஞர், யுவதிகள் இதனைச் செவ்வனே செய்தால் வெற்றிகரமாக இலஞ்சமும் ஊழலும் முதலில் சமூக மட்டத்தில் நீங்கி, பின்னர் நகர மட்டத்தில் நீங்கி பின்னர் முழு நாட்டிலும் முற்றாக நீங்கிவிடும். அதற்குரிய நடவடிக்கை களாக நாம் என்ன செய்யலாம் என்பதை அவதானிக்கலாம்.

இலஞ்சம் நடைபெறும் இடங்களை முதலில் இலஞ்சத் திணைக்களம் அறிய வேண்டும். பல இடங்களிலும் பல்வேறு நிறுவனங்களிலும் இலஞ்சமும் ஊழலும் தலைவிரித்தாடுவதைக் காண முடியும். முதலில் பொலிஸ் நிலையத்தை எடுத்துக் கொண்டால்

குற்றம் செய்பவன் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி குற்றத்தை செய்துவிட்டு பொலிஸ் நிலையத்திற்குச் சென்று தனது பண வலிமையைக் காட்டி லஞ்சத்தைக் கொடுத்துவிட்டு, தான் இலகுவாக தப்பித்துக் கொண்டு நிரபராதியான அப்பாவி மக்களை பொலிஸ் கூட்டினுள் விடுதை நாம் காணலாம். இங்கே பார்த்தீர்கள் என்றால் அரச நிறுவனமே நீதி தவறி இலஞ்சத்தைப் பெற்றால் மற்றவர்கள் என்ன வகையில் செயற்பட முடியும்?

இதனைவிட சாரதி அனுமதிப்பத்திரம் உரிய முறைப்படி வைத்திராமல் ஆசையின் நிமித்தம் வாகனங்களை தெருவில் ஓடித்திரியும் போது, அவர்களைப் பொலிசார் மறித்து அனுமதிப் பத்திரம் என்று மிரட்டும் வேளையில் நூறோ, இருநூறோ கையில் வைத்து ஏமாற்றிவிட்டுப் போகிறார்கள். இவர்கள் தங்களையும் ஏமாற்றி பொலிசாரையும் தவறான வழிக்கு இட்டுச்செல்கின்றனர். வாகனம் ஓட்டத் தெரியாமல் ஓடி வாகனத்தோடு மோதி விபத்துக்குள்ளா கின்றான். இதனால் தேவையற்ற உயிரிழப்புகளும், பொருள் இழப்புகளும் சம்பவிக்கின்றன.

பெரிய அதிகாரிகள் தங்கள் பிள்ளைகள் தேசிய பாடசாலைகளில் படிக்க வேண்டும் என்பதற்காக அதிபர்களிடம் இலஞ்சத்தை கொடுக்கிறார்கள். இதன் மூலம் உயர்ந்த வர்க்கத்தாரின் பிள்ளைகள் தான் அதிகமாக தேசிய பாடசாலைகளில் கல்வி பயிலும் தன்மையை இங்கு உற்று நோக்க முடிகின்றது.

அடுத்த படியாக சமூகத்தின் கீழ் நிலையில் உள்ள பெண்கள் கற்புப் பறிபோகும் நிலையை இங்கு காணக் கூடியதாக உள்ளது. வறுமைப்பட்ட பெண்களை தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி தங்களின் நலத்திற்காகவும், தங்களின் ஆசைகளை நிறைவேற்று வத்ற்காகவும் பயன்படுத்துகின்றனர். இவ்வகையான பெண்களைப் போதைவஸ்துப் பாவனைக்கு உட்படுத்தி அவர்களின் வாழ்க்கையை நாசம் செய்து விட்டு தம்பாட்டில் சென்று விடுகிறார்கள். இதனால் பாதிக்கப்படுபவர்கள் பெண்களே ஆவார்கள்.

ஊழல் என்ற வகையில் அடக்கு முறையைப் பயன்படுத்தி தங்களின் கீழ் அப்பாவி மக்களை அடிமைப்படுத்தி வைத்திருத்தல் நடைபெறுகிறது. இதனால் அவர்கள் நினைத்ததைச் செய்யலாம்

என்பதற்காக, அடக்கு முறையைப் பயன்படுத்துகிறார்கள். மக்களுக்குச் சேரவேண்டிய பணம் முறைகேடாக அதிகாரிகளின் கைகளில் சென்றுவிடுகிறது.

இவ்வாறாக இலஞ்சமும் ஊழலும் பல்வேறு இடங்களிலும் பல்வேறுவிதமாக நிகழ்வதனை பரவலாக நாம் அறிந்து கொள்ளலாம். இலஞ்சத்தையும், ஊழலையும் எல்லா மக்களிடையேயும் இருந்து ஒழித்தல் வேண்டும். அதுமட்டுமன்றி அதுபற்றி விழிப்புணர்வையும் வழங்குதல் வேண்டும். இதன்மூலம் அபிவிருத்தி காணும் நாட்டைக் கட்டியெழுப்பலாம்.

(1ம் பரிசு பெற்ற கட்டுரையின் சுருக்கம்)

கு. யாழினி
A/L 2009


## சிறுவர்களுக்கான

ஹப்பன், புஞ்சி ஹப்பன் சேமிப்புக் கணக்குகளில் வைப்பிலிடுங்கள். உங்கள் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புங்கள்.

ரிதிரேகா அதிர்ஷ்டசீட்டுக்கள் மூலமும், சேமிப்புக் கணக்குகளில் அதிக பணத்தை வைப்புச் செய்வதன் மூலமும் கவர்ச்சிகரமான பரிசுகளையும், பெருந்தொகைப் பணத்தையும் அதிர்ஷ்டமாக வென்றிடலாம்.

NSB தேசிய சேமிப்பு வங்கி

உங்கள் குடும்ப வங்கி

மானிப்பாய்



# "சீற்றம் கொள்ளாதே"



"சீறு கடிக்காதே" என்று ஸ்ரீ இராமகிருஷ்ணர் கூறுகின்றார். தேவையான சமயங்களில் கோபம் கொண்டவர் போல் நடிக்கலாம். இதனால் மற்றவர்கள் பயப்படுவார்களே தவிர யாருக்கும் எந்தத் தீங்கும் ஏற்படாது. கோபம் என்ற நிலை நம்முடைய கட்டுப்பாட்டில் இருக்குமானால் எந்தத் தீமையும் விளையாது. மாறாக கோபத்தின் ஆக்கிரமிப்பில் நாம் செயற்படுவோமாகில் தீமை செய்யும் மனப்பாங்கு எம்மிடம் வளரும்.

கோபத்தாலோ, தண்டனையினாலோ எவரையும் திருத்திவிட முடியாது. ஆனால் அன்பு, பொறுமை மூலம் திருத்த முடியும். அன்புடன் இனிமையாகப் பேசுவது, நல்வார்த்தைகள் பேசுவது, மங்கல எண்ணங்களை வளர்ப்பது, மற்றவர் துன்பம் களைவது போன்ற பண்புகளை வளர்த்துக் கொண்டால் கோபம் எனும் அசுரன் நம்மைவிட்டு மெல்ல மெல்ல விலகுவான்.

எமக்கு ஏற்படும் துன்பங்களுக்குக் கோபமே தாயாகும். கோபம் என்ற தாய் பெற்ற குழந்தைகள் தான் பொல்லாத செயல்கள். தகாத வார்த்தைகள், சொற்களைக் கொட்டுவது சுலபம். மீண்டும் அதை அள்ளமுடியாது. கோபத்தைப் பொறுக்கும் மனப்பான்மையை நம்மிடம் வளர்த்துக் கொள்வது சாலவும் சிறந்தது. பொறுமை மிகவும் கசப்பானது. ஆனால் அதனுடைய விளைவு இனிப்பானது.


கோபப்படுகிறவர் முன் பொறுமையைக் கைக் கொள்ள வேண்டும். கோபக்காரன் முன் ஒன்றுமே பேசாது அமைதியாகவும், பொறுமையாகவும், அன்பாகவும் நடந்து கொள்ள வேண்டும்.

வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான மூலகங்களில் சகிப்புத் தன்மை, பொறுமை, பிறரை மகிழ்வித்தல், அன்புடன் கூடிய இனிமையான சுபாவம் என்பன குறிப்பிடத்தக்கன. நமது வாழ்க்கை குறுகியதாக இருப்பதால் நாம் செல்லும் இடமெல்லாம் கோபம் எனும் முட்களைத் தூவாது அன்பு எனும் மலர்களைத் தூவி வாழ்நாளை இனிமையாக்குவோம்.

திருமதி. அ. ஈஸ்வரன்

# What is A.M. and P.M?

This expression is used by all to indicate before noon and after noon. What is the meaning of these words? The rotation of the Earth on its axis makes the sun and the stars seem to go round the sky. The day begins when the sun rises in the east and the day ends when the sunsets in the west. And when it is high in the sky, half of the daylight hours have already been spent.



To know the correct time, it is important to know the correct moment of Sun. When the sun is directly overhead it is noon.

Draw an imaginary line across the sky from north to south. when the sun is east of this line or meriden, it is Forenoon i.e, morning. After the sun has crossed this meriden, it is afternoon.

The meridies is latin word for mid - day. The word meridien is derived from meridies Therefore, a.m is a short from ante meridien or before mid - day. And P.m is for post meridien or after mid - day.

**Mrs. F.R.J. Jeyanthan**

**1. Deer, 2. Earth, 3. Stars, 4. Parrot, 5. Insects,**
**6. London - Capital of England, 7. Eye lids,**
**8. Ghillie, 9. Watch, 10. Salt**

Riddles - Answers

# மாயச் சதுரங்கள்

மாயச்சதுரம் என்பது இயற்கை எண்களால் சதுர உருவத்தில் அமைக்கப்பட்ட ஓர் அமைப்பாகும்.

சதுரத்தில் உள்ள எண்களை நிரல் வழியாக, நிரை வழியாக, மூலைவிட்டம் வழியாக என எந்த வகையில் கூட்டினாலும் பெறப்படும் கூட்டுத்தொகை சமனாகும்.

இம் மாயச்சதுரங்கள் 3×3, 4×4, 5×5,6×6,7×7,8×8,9×9 எனப் பல்வேறு வகைகளைக் கொண்டுள்ளது. இம் மாயச் சதுரங்கள் ஓர் கணித செயற்பாடு மட்டுமன்றி பல கணித உத்திகளைக் கையாள நெறிப்படுத்துவதோடு சிறந்த பொழுது போக்காகவும் அமைகின்றது.

அடுத்து நாம் 3×3, 4×4 மாயச்சதுரங்கள் அமைக்கும் வழிகளைப் பார்ப்போம். மாயச் சதுரங்களைப் பலவிதமாகத் தயாரிக்கலாம். ஆனால் மாணவர் கற்றுக் கொள்வதற்கு உரிய ஓர் எளிய முறையை நாம் இங்கு பார்ப்போம்.


**3×3 மாயச்சதுரம் அமைத்தல்.**

1 தொடக்கம் 9 வரையான முழு எண்களைக் கொண்டு நிரல், நிரை, மூலைவிட்டம் என எவ்வழியால் கூட்டினாலும் கூட்டுத்தொகை 15 கிடைக்க வேண்டும் என உங்களிடம் ஓர் வினா வினவப்படுகின்றது. இதற்காக உங்களுக்கு 2 நிமிட நேரம் தரப்படுகின்றது எனக் கொள்வோம். இதற்கு மாயச்சதுரம் அமைக்கும் வழியே மிகப் பொருத்தமானதாகும்.

<u>படி 1</u> முதலில் 1-9 வரையான முழு எண்களை கீழ் கண்டவாறு எழுதுதல் வேண்டும்.


| | | |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 |

<u>படி 2</u> அவ் எண்களுக்கிடையில் (அவ் எண்களை வெட்டாமல்) குறுக்கு கோடுகள் வரைய வேண்டும்.





<u>படி 3</u> அடுத்து 9, 1 எனும் இலக்கங்களை வெட்ட வேண்டும். அதன்பின் 9ஐ வெட்டிய 1ற்கும் 5 ற்கும் இடையிலும் 1ஐ வெட்டிய 9 ற்கும் இடையிலும் இடம் மாற்றி எழுத வேண்டும்.

<u>படி 4</u> படி 3ல் செய்யப்பட்ட செய்கையை 7, 3 எனும் இலக்கங்களுக்கும் செய்தல் வேண்டும்.




தற்போது உங்களுக்கு மாயச்சதுரம் பெறப்பட்டது.




| | | |
|---|---|---|
| 4 | 9 | 2 |
| 3 | 5 | 7 |
| 8 | 1 | 6 |

இவ்வழிமுறைக்கு 2 நிமிட நேரம் போதுமானது.

இதேபோல்

1 11-19 வரையான முழு எண்களைக் கொண்டு மாயச்சதுரம் அமைக்க கூட்டுத்தொகை எல்லாவழியிலும் 45 பெறப்படுகின்றதா என வாய்ப்பு பார்க்க.

2 21-27 வரையான முழு எண்களை கொண்டு மாயச்சதுரம் அமைக்க கூட்டுத்தொகை 75 பெறப்படுகின்றதா என வாய்ப்பு பார்க்க.

3 4-12 வரையான முழு எண்களைக் கொண்டு மாயச்சதுரம் அமைக்க கூட்டுத்தொகை 24 பெறப்படுகின்றதா என வாய்ப்பு பார்க்க.


## 4×4 மாயச்சதுரம் அமைத்தல்

1-16 வரை முழு எண்களை கொண்டு மாயச்சதுரம் அமைத்தல்.

<u>படி (i)</u> முதலில் ஒன்று முதல் 16 வரை எண்களை கீழ் கண்டவாறு எழுதிக் கொள்க.

| | | | |
|---|---|---|---|
| 1 | 9 | 2 | 4 |
| 3 | 5 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

<u>படி (ii)</u> மூலைவிட்டம் வழியாக வெட்டிக் கொள்க.




<u>படி (iii)</u> வெட்டப்படாத எண்களை அப்படியே எழுதிக் கொள்ளவும்.

| | | | |
|---|---|---|---|
| | 2 | 3 | |
| 5 | | | 8 |
| 9 | | | 12 |
| | 14 | 15 | |

**படி (iv)** வெட்டப்பட்ட எண்களை (மூலைவிட்டம் வழியாக) இடம் மாற்றி எழுதவும்.

| | | | |
|---|---|---|---|
| 16 | | | 13 |
| | 11 | 10 | |
| | 7 | 6 | |
| 4 | | | 1 |

**படி (v)** படி (iii), படி (iv) சதுரங்கள் இரண்டையும் இணைத்துக் கொள்ளவும்.

| | | | |
|---|---|---|---|
| 16 | 2 | 3 | 13 |
| 5 | 11 | 10 | 8 |
| 9 | 7 | 6 | 12 |
| 4 | 14 | 15 | 1 |

இப்போது இம் மாயச்சதுரத்தின் கூட்டுத்தொகை நிரல் நிரை மூலைவிட்டம் வழியாக சரியாக உள்ளதா என வாய்ப்பு பார்க்க.

இதேபோல 16 அடுத்துவரும் முழு எண்களை எடுத்து மாயச்சதுரம் அமைத்து நிரல், நிரை, மூலைவிட்டம் வழியாக கூட்டுத்தொகை சமனாக உள்ளதா என வாய்ப்புப் பார்க்க.

மாயச்சதுரங்கள் நாம் எழுதியபடியே அமைய வேண்டிய அவசியம் இல்லை. நிரல் என்பது நிரையாகவும், நிரை என்பது நிரலாகவும் சுழற்றி மாயச்சதுரம் அமையலாம்.

**இவ்வாறு மாயச்சதுரங்கள் அமைப்பதன் மூலம் எமது ஓய்வுநேரப் பொழுதைப் பயனுள்ளதாகக் கழிப்போம்.**

**செல்வி து. மஞ்சுளா**

□□

இவ்வாண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் தமிழ்ப்பாட மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்தும் நோக்குடன் எமது பாடசாலையில் கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது. இலக்கணம், இலக்கியம் என இருபகுதிகளாக அமையும் இக்கருத்தரங்கு பரீட்சை நோக்கில் கடந்த கால வினாக்களுக்கு விடை தேடுவதுடன் எதிர்பார்க்கை வினாக்களையும் கொண்டதாக அமையும். 18-07-2008 அன்று முதலாவது கருத்தரங்கு நடைபெறும். இதில் பங்குபற்றுவோர் தங்களது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவும்.

# மெழுகுவர்த்தி

சூரியன் உச்சி வானில் பிரகாசித்து வெயிலைப் பொழிந்து கொண்டிருந்தது. மோட்டார் சைக்கிளில் சிட்டாய்ப் பறந்துவந்த சிவகடாட்சம் ஆசிரியர் மோட்டார் சைக்கிளை விட்டு இறங்கி வேகமாக தரம் 11 வகுப்பறைக்குள் நுழைந்தார். முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்துவிட்டு மகிழ்ச்சி பொங்க "நாடகப் போட்டி யிலை எங்களுக்கு முதலாமிடம் கிடைச்சிருக்கு" என்றார்.

இதைக்கேட்டதும் மாணவர்கள் கைதட்டி, கூக்குர லிட்டு ஆரவாரித் தனர். "உஷ், அமைதி. அதிபர் வந்தால் ஏசுவார்" என்று அவர்களைச் சாந்தப்படுத்தினார். பாடசாலையைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்த அதிபர் "என்ன சத்தம்?" என்றபடி சிவகடாட்சம் அருகே வந்தார்.

"நாடகப் போட்டியிலை எங்களுக்கு முதலிடம் ஸேர்" சிவகடாட்சம் சொல்லவும், அதிபர் மகிழ்ச்சியுடன் புருவத்தை உயர்த்தி "அப்படியா.... வாழ்த் துக்கள்!" என்று கூறி அவரது கையைப் பற்றிக் குலுக்கினார்.

"மாகாணத்துக்கு உடனே போக வேணும். சனிக்கிழமை கப்பலில் இலவசமாக ஏற்றிச் செல்கிறார் களாம். அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்" அதிபரிடம் சிவகடாட்சம் சொன்னார்.

"ஓ தாராளமாக.... பாடசாலை சார்பில் நான் பணம் தருகிறேன். மேற்கொண்டு நான் என்ன செய்ய வேண்டுமோ செய்கிறேன். நீங்கள் ஆவதைக் கவனியுங்கோ" என்று அதிபர் சொல்லி அவரை வழியனுப்பி வைத்தார்.

சிவகடாட்சம் ஆசிரியரின் இரண்டாவது வீடு பாடசாலைதான். பாடசாலையின் எல்லாச் செயற் பாட்டிலும் உற்சாகமாகச் செயற் படுவார். எந்தச் செயலையும் செய்து முடித்து அதில் வெற்றி காணும்வரை ஓய மாட்டார்.

**சிறுகதை**

பிள்ளைகளுக்கு அவரைக் கண்டால் ஒரே மகிழ்ச்சி. சூரியனைக் கண்ட தாமரை போல உற்சாகமாகி விடுவார்கள். அவர் பிரம்பெடுப் பதில்லை. கனிவான வார்த்தைகளால் எல்லோரையும் கட்டிப்போட்டு விடுவார்.

"கண்டறியாத செல்லம் கொடுக்கிறார். இப்படியே போனால் பிள்ளையள் தலைக்குமேல் ஏறி விடுங்கள்" என்று அவரைக் கடிந்து கொண்ட ஆசிரியர்களும் உள்ளனர்.

மாணவர்களைப் பொறுத்த வரை அவர் சொல்வதை அப்படியே ஏற்று விடுவார்கள். மோட்டார் சைக்கிளின் சத்தம் கேட்டது. சிவகடாட்சம் வந்து கொண்டிருந் தார். அதிபரிடம் சென்று கதைத்து விட்டு, தரம் 11 வகுப்புக்கு வந்தார்.

"பிள்ளையள், எல்லா ஏற்பாடும் செய்தாச்சு. நாளை மறுதினம் காலை 8.00 மணிக்கு எல்லா ஆயத்தத்தோடையும் வாங்கோ. நாளைக்கு வீட்டிலை நின்று ஆகவேண்டியதைப் பாருங்கோ" என்று சொல்லி அனுப்பிவிட்டுச் சென்றார்.

❊ ❊ ❊



அன்று காலை எல்லோரும் தயாராக நின்றனர். தூரத்தே குண்டு வெடிக்கும் சத்தம் கேட்டது. "இது இங்கு வழக்கமானதுதானே" என்று சொல்லியபடி ஒவ்வொருவரும் அளவளாவிக் கொண்டிருந்தனர். எட்டரை மணியாகியும் சிவகடாட்சம் ஆசிரியர் வரவில்லை. நேரந் தவறா தவர் வரவில்லையென்றால்...? அதிபர் அவரைப் பார்த்து வருமாறு ஆசிரியர் ஒருவரை அனுப்பினார். அவர் வந்து சொன்ன செய்தி.... இடிபோல எல்லோரையும் தாக் கியது.

"வீதியிலை வெடிச்ச குண்டிலை எங்கடை ஸேரும்....."

எல்லோரும் ஒரு கணம் அதிர்ச்சியில் உறைந்தனர்.

நாடகத்தைப் பழக்கிய அவரது அங்க அசைவுகள் எல்லோர் மனதிலும் நிறைந்தது.

"ஐயோ கடவுளே!" அதிபர் குழற, பிள்ளைகளும் பெருங்குரலெடுத்து அழுதனர். பாடசாலை முழுவதும் அந்த அலறல் எதிரொலித்தது.

த. விஸிதா
A/L 2009

□□



# அன்னை தெரேசா

(1910 - 1997)

அன்னை தம் வாழ்க்கையை அநாதைகளின் சேவைக்காக அர்ப்பணித்தவராவார். இந்திய நாட்டிலுள்ள ஏழைகளுக்குச் சேவை செய்வதற் காகத் தம் வாழ்நாள் முழுவதும் இந்தியாவிலே நிரந்தரமாகத் தங்கியிருக்கத் தேர்ந்தெடுத்தார். அன்னை தெரேசா யுகோஸ்லாவியா நாட்டின் ஸ்கோப்ஜே நகரில் 27-08-1910இல் பிறந்தார். தந்தையார் அல்பேனியா களஞ்சியக் காப்பாளர் ; தாயார் விவசாயி. இவர்களுடைய மூன்று குழந்தைகளுள் தெரேசாவும் ஒருவர். தொண்டு செய்யும் மனப்பாங்கு அவருடைய 12ஆவது வயதிலேயே தோன்றியது. இதற்குக் காரணம் டார்ஜிலிங்கிற்கு அருகில் குர்சியாங் என்ற இடத்தில் கிறிஸ்து மத தொண்டர்கள் பணியாற்றுகிறார்கள் என்பதை அறிந்தார்.

டப்ளின் வந்து லொரோடோ கன்னித் துறவிகளோடு சேர்ந்து கொண்டு ஓராண்டு பயிற்சி பெற்றார். ஆங்கிலம் கற்றுத் தேர்ந்து 1929இல் கல்கத்தாவுக்கு வந்தார். புனித மேரி உயர்நிலைப் பள்ளியில் புவியியல் ஆசிரியரானார். பின்னர் அவர் பல வருஷங்கள் அப்பள்ளியில் தலைவராகப் பணியாற்றினார். அவர் செய்யும் தொழிலுக்கு கன்னி மடத்தின் வசதிகள் எதிரிடையாய் இருந்தன. 10-09-1946இல் யேசு கிறிஸ்துவிடமிருந்து பிரத்யேகமான அழைப்பு ஒன்றை அவர் பெற்றார். அதை அவர் "பரவசநாள்" என்றும் "தீர்ப்புநாள்" என்றும் வருணித்தார். இது எவ்வாறு நேர்ந்தது என்று ஞாபகப்படுத்திப் பார்த்தார். இந்த உலகில் வேறு எந்த நகரமும் கல்கத்தாவைப் போல அவ்வளவு துன்பம் நிறைந்திருக்கவில்லை. அங்குள்ள சேரிகளில் வேலை செய்ய அனுமதியும் பெற்றுக் கொண்டார். போப்பாண்டவரும் தனது ஆசீர்வாதங்களை அளித்தார். பாட்ணாவில் அமெரிக்கா மருத்துவக் கழகத்தோடு கோடையில் மூன்று மாதங்கள் தீவிரமாக தாதியப் பயிற்சி பெற்றார். 1948இல் அன்னை தெரேசா தமக்கென்று அளிக்கப்பட்ட வீட்டில் முதல் சேரிப் பள்ளியை ஆரம்பித்தார். அப்போது அவரிடம் 5ரூபா 75பைசாவே இருந்தது. சில மாதங்கள் கழித்து அவரது நம்பிக்கையுள்ள மாணவியாகிய சுபாசினி தாஸ் என்பவர், சிஸ்டர் அக்னீஸ் (Sister Agness) என்னும் பெயருடன் அவருடன் வந்து சேர்ந்தார். வானிலிருந்து பெய்யும் மழை, மேடு, பள்ளம், காடு, கழனி என்றெல்லாம் பாகுபாடு பார்ப்பதில்லை. அறப்பணி இயக்கத்தை தோற்றியுள்ள அன்னை திரேசாவும் சாதிசமயம்,

நாடு, மொழி என்னும் வேறுபாட்டுக்கெல்லாம் இடம் கொடுக்காமல் எல்லா ஏழைகளுக்கும் பிணியாளருக்கும் நடுநிலை பிறவாமல் நற்பணியாற்றினார். .இவரது தன்னலமற்ற சேவையைக் கௌரவித்து இந்திய அரசு "பாரதரத்னா" என்ற உயர் விருதை அளித்தது. 1979ஆம் ஆண்டு சமாதானத்துக்கான நோபல் பரிசு இவருக்கு வழங்கப்பட்டது. 1997இல் அன்னை தெரேசா இவ்வுலகை நீங்கினார். அவர் புனிதராகத் திருநிலைப் படுத்தப்பட்டு எல்லோர் இதயங்களிலும் வாழ்கின்றார்.

**சி. நிஷாந்தி**
**இ. நிருஷிகா**
9B

□□




பண்மகள் சஞ்சிகையின் இரண்டாவது இதழ் 01-02-2008 அன்று வெளியிட்டு வைக்கப்பட்டது. பண்டத் தரிப்பு ப.நோ.கூ. சங்க பொது முகாமையாளர் திரு. ஆ. நாகராஜா அவர்கள் சஞ்சிகையை வெளியிட்டு வைக்க, பாடசாலையின் பழைய மாணவி திருமதி ஜெனிற்றா நல்லையா அவர்கள் அதனைப் பெற்றுக் கொண்டனர்.

பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி 06-02-2008 புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் திருமதி. கி. சிவராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்றன. இதில் பிரதம விருந்தினராக வலி. தென்மேற்கு பிரதேச செயலர் திரு. மேரியோசப் சாந்தசீலன் அவர்களும், சிறப்பு விருந்தினராக இலங்கை வங்கி மானிப்பாய் கிளை முகாமையாளர் திருமதி ஜனனி வைரவநாதன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# தொலைந்த வாழ்வு



தொலைக்காட்சிப் பெட்டியாலே
தொலைந்தது நமது பொழுது
சினிமாவின் விறுவிறுப்பில்
சீரழிந்த நமது வாழ்வு
சீராக வாழ்ந்த மக்கள்
திசைமாறித் தொலைக்காட்சிமுன்
குந்தியிருக்கிறார் குடும்பத்தோடு.
பார்க்கவொண்ணாக் காட்சிகளைப்
பார்த்துப் பாழாய்ப் போகிறார்கள்.
கட்டிக்காத்த தமிழ் பண்பாடு - காட்சிப்
பெட்டியாலே மறைந்து போச்சு
நல்லவற்றைப் பார்க்காது
தீயவற்றைப் பார்த்து நாமும்
பன்னாடை போல வாழ்வை
மாற்றி விட்டோம்... என்செய்வோம்?
சிந்திப்பாய் மானிடனே!

**பி. மேரிஜான் றபேக்கா**
A/L 2009 கலைப்பிரிவு

## நூல் சேகரிப்புத் திட்டம்

மாணவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் வீடுகளிலும், உறவினர்கள் நண்பர்கள் வீடுகளிலும் பயன்படுத்தப்படாது இருக்கும் நூல்களைப் பாடசாலை நூலகத்துக்கு தந்துதவ வேண்டும். அத்துடன் ஒவ்வொருவரும் தமது பிறந்தநாளுக்கு பாடசாலை நூலகத்துக்கு ஒவ்வொரு நூலை அன்பளிப்பாக வழங்கி உதவ வேண்டும். இதன் மூலம் பாடசாலை நூலகத்தை வளப்படுத்தி எமது அறிவாற்றலை உயர்த்துவோம்.

## பொது அறிவுப் போட்டி - 3

01. "சொல்புதிது ; பொருள் புதிது ; சந்தம் புதிது" எனத் தமிழ்க் கவிதையை மக்கள் மயப்படுத்திய கவிஞர் யார்?
02. மியன்மார் நாட்டில் ஜனநாயகத்துக்காகப் போராடும் பெண் அரசியல் வாதி வீட்டுக்காவலில் நீண்டகாலமாக வைக்கப்பட்டுள்ளார். அவரது பெயரென்ன?
03. மானிட வரலாறு கூறும் புகழ்பெற்ற "வால்காவிலிருந்து கங்கா வரை" நூலை எழுதியவர் யார்?
04. முன்னர் இலங்கையின் தேசிய விளையாட்டுக்களில் ஒன்றாக அமைந்ததும், தற்போது பாடசாலைகளுக்கு மீண்டும் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளதுமான விளையாட்டு எது?
05. யாழ்ப்பாண அரசின் எச்சங்களில் ஒன்று பகரவடிவ ஏரியாகும். இதன் பெயர் என்ன? இது எங்குள்ளது?
06. அண்மையில் மியன்மாரில் பேரழிவை ஏற்படுத்திய சூறாவளியின் பெயரென்ன?
07. அண்மையில் செவ்வாய்க் கிரகத்தில் தரையிறங்கிய ஆய்வு விண்கலத்தின் பெயரென்ன?
08. இலங்கையின் ஆதிவரலாற்றைக் கூறும் ஆவணம் மகாவம்சமாகும். இதன் மூல ஆசிரியர் யார்?
09. சென்று வரவணித்தாய்ச் செல்வாரும் சொற் கேட்டால் என்றும் உழவே இனிது" என்ற பாடலடிகள் யாரால் பாடப்பட்டவை?
10. இலங்கையின் தேசிய கீதத்தைப் பாடியவரின் இயற்பெயரென்ன?

விடைகள் வந்துசேர வேண்டிய இறுதித் திகதி : 15-07-2008

## பொது அறிவுப் போட்டி - 2 விடைகள்

01. அதிவீரராம பாண்டியன், 02. மெல்வின் ஜோன்ஸ், 03.பிரான்ஸ் பேர்டினன்ற், 04. அன்னை தெரேசா, 05. மிஹின் எயார், 06. சார்ள்ஸ் டிக்கின்ஸ், 07. இங்கிலாந்து, விம்பிள்டன், 08. பெனாஸிர் பூட்டோ, 09. பிக்காஸோ, 10. திருவள்ளுவர் ஆண்டு

யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானபீடம் முன்பாக, திருநெல்வேலியில் அமைந்துள்ள **தேர்ந்த நூல்களின் சங்கமம் BOOK LAB** வழங்கும் நூற்பரிசை வெற்றி கொள்வோர்.

வி. சாருஜா - தரம் 9B, நா. அபிராமி - தரம் 8B, தி. திலோஜன் - தரம் 4

# பாடசாலைக்குப் பெருமை சேர்த்தோர்

- தேசிய கலை கலாசார பேரவை நடாத்திய கட்டுரைப் போட்டியில் சிரேஷ்ட பிரிவில் எமது பாடசாலை மாணவிகளான விஸிதா தங்கத்துரை முதலாமிடத்தையும், மேரி ஜான் றபேக்கா பிரான்ஸிஸ் இரண்டாமிடத்தையும், ஜெயமதி தியாகராசா மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.
- ஐக்கிய நாடுகள் சபையின் உலக ஊழல் எதிர்ப்பு தினத்தையொட்டி இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்ட நிறுவனத்துடன் இணைந்து அகில இலங்கை ரீதியில் பாடசாலை களுக்கிடையே நடாத்திய கட்டுரைப் போட்டியில் எமது பாடசாலையின் A/L 2009 தரத்தில் கல்வி பயிலும் கு. யாழினி முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.
- மனித உரிமைகள் ஆணைக்குழுவால் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் எமது பாடசாலை மாணவியான சகுந்தலா தம்பிஐயா வலயமட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.
- யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தால் நடாத்தப்பட்ட பொதுஅறிவுப் போட்டியில் தரம் 11இல் கல்வி பயிலும் நிந்துஜா வேல்முருகன் C பிரிவில் சித்தியடைந்துள்ளார்.

## RIDDLES


### Can you guess the answers?

1. A forest animal with 4 letters. 2nd & 3rd letters are same. They are vowels too. What is this animal?
2. A blue ball around the sun. It has lot of thing in and on. But we can't play this. what is this?
3. Light flowers in the sky. But we can't pluck them what are they?
4. A green queen on a tree. She is eating fruits. Who is she?
5. A type of living things. The first two letters refer a preposition. Bees are included in this type what it?
6. Capital of an English country with 6 letters. 2nd & 3rd letters and 5th & 6th letters refer a same preposition what is the capital city?
7. Two doors. They open & close without sound, what are they
8. She was green in young she came red in old, who is she?
9. I have two hands. I wear glass. I show time what am I?
10. Its birth place & death place is water. What is this?

**T. Januja** (11B)

# நாம் சென்ற கல்விச் சுற்றுலா

09-05-2008 வெள்ளிக்கிழமை அன்று எமது பாடசாலை சமூக விஞ்ஞான ஆசிரியர்களால் ஓர் கல்விச் சுற்றுலா ஒழுங்கு செய்யப்பட்டது. அக்கல்விச் சுற்றுலாவானது பல மாணவர்களின் தேடலிற்கு அடித்தளமாக அமைந்தது. நாம் பல இடங்களைப் பர்வையிடவும் முடிந்தது.



141 மாணவர்களையும் 7 ஆசிரியர் களையும் கொண்ட இக்கல்விச் சுற்றுலா காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகியது. நாம் முதன்முதலாகச் சென்ற இடம் கந்தரோடை தொல்பொருள் அகழ்வு நிலையம். அங்கே அகழ்வு மூலம் பெறப் பட்ட சான்றுகளையும், தூபி களையும் பார்த்தோம். அவற்றை நோக்கும் போது அங்கு பண்டைய காலத்தில் பௌத்த மக்கள் வசித்திருக்கக்கூடும் என எண்ணத் தோன்றுகிறது. அங்கு இராணுவ முகாம் உள்ளதுடன் கதுருகொட புராண விகாரை எனப் பெயரும் சூட்டப் பட்டுள்ளது.

அதன்பின்னர் நாம் சுன்னாகத்திலுள்ள இலங்கை மின்சார சபையின் மின் உற்பத்தி நிலையத்திற்கு சென்றோம். அங்கு உரிய அனுமதியின்றி எவரும் செல்ல முடியாது. அப்படியிருந்தும் அனுமதி பெற்று நாம் சென்று மின் உற்பத்தி நிலையத்தின் மின் உற்பத்தி செய்யும் முறையைப் பார்வையிட்டோம். இதற்கு நாளொன்றுக்கு 80 ஆயிரம் லீற்றர் டீசல் தேவை என்பதை நாம் அவர்கள் மூலம் அறியமுடிந்தது. இதுமட்டுமல்லாது இன்னும் சிலகாலத்தில் சுன்னாகம் மின்சாரசபையில் சீன நிறுனம் மின் உற்பத்தியை ஆரம்பிக்க உள்ளதாகவும் நாம் அறிந்தோம். இப்படியாக நாம் அங்கே நீண்ட நேரத்தை செலவிட்டோம். அதன்பின்னர் நாம் ஊரெழுவிலுள்ள பொக்கணை வற்றாத நீர் ஊற்றையும் பார்வையிட்டோம்.

அன்பின்னர் திருநெல்வேலியிலுள்ள வானிலை ஆராய்ச்சி நிலையத்திற்குச் சென்றோம். அங்கே நமது மதியபோசனத்தை முடித்துக் கொண்டு அதன்பின்னர் அதற்கு அருகாமையிலுள்ள விவசாய பண்ணையையும் பார்வையிட்டோம். அங்கே விவசாய மாணவர்களின் பாடத்திற்கு அமைவான நீர்ப்பாசனமுறை, பாத்தி அமைப்புக்கள், கன்றுகளின் வகை என்பன பற்றியும் அறியமுடிந்தது,

பின்னர் ஆரியச்சக்கரவர்த்திகளில் இறுதி அரசனான யாழ்ப்பாணப் பெருவேந்தனான சங்கிலிய மன்னன் வசித்த மந்திரிமனை அரண்மைனையைப் பார்வையிடச் சென்றோம். அங்கே காணப்பட்ட உள் அறைகளின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது அங்கே பலர் வசித்தமை புலனாகிறது. தோரண வாயிலையும் பார்வையிட்டோம். அதன் பின்னர் நாம் ஜமுனா ஏரிக்குச் செல்வதென இருந்தோம். ஆனால் நேரத்தின் பற்றாக்குறை காரணமாக நாம் அங்கே செல்லாது நல்லூரிலுள்ள தொல்பொருட் காட்சியகத்திற்குச் சென்றோம்.

அங்கே பண்டைய காலத்தில் அகழ்வுகள் மூலம் கண்டெடுக்கப்பட்ட வளையல், காற்சலங்கை, பல அணிகலன்கள் மற்றும் தலையில்லாப் புத்தர், பண்டைய மக்கள் பயன்படுத்திய மண் பாத்திரங்கள், ஆயுதங்கள், கோடரி, கத்திகள் என்பனவும் பண்டைய மக்களின் செதுக்கல்களைக் கொண்ட பாம்புகளின் சிலை. ஐயனார் சிலை என்பனவும் காணப்பட்டன. அதுமட்டுமல்லாது நீண்ட காலத்திற்கு முன் கொழும்புத்துறைக் கடலில் கரையொதுங்கிய திமிங்கிலத்தின் எலும்புக்கூடும் அங்கு காணப்பட்டது.

அங்கிருந்து நாம் யழ்ப்பாணப் பொதுநூலகத்திற்குச் சென்றோம். அங்கே காணப்பட்ட பலவகையான நூல்களைப் பார்வையிட்டோம். அதன் இரண்டாவத மாடியில் நின்று யாழ்ப்பாணத்தின் இயற்கை எழிலைப் பார்க்க முடிந்தது. அதன் பின்னர் நாங்கள் அங்கிருந்து மாலை 4.30 மணியளவில் வீடு நோக்கி வந்தோம். அப்பயணம் எங்கள் எல்லோரையும் சந்தோசத்தில் ஆழ்த்தியதுடன் பல விடயங்களையும் அறிந்து கொள்ள உதவியது.

**ம. சிவகௌரி**
தரம் - 10B



மாவட்ட மட்டத்தில் சாதனை படைத்த கரப்பந்தாட்ட, வலைப்பந்தாட்ட அணிகளைப் பாராட்டும் வரவேற்பு விழா 27-05-2008 அன்று நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக சண்டிலிப்பாய் சங்கானை கோட்ட உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி கோசலை குலபாலசிங்கம் கலந்துகொண்டார். பாடசாலை ஆசிரியர் நலன்புரிச் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இந் நிகழ்வில் வீராங்கனைகள் கௌரவிக்கப் பட்டனர்.